# பருத்தித்துறை தேர்தல் ஆட்சேப மனு செலவுடன் தள்ளுபடி

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 66

யாழ்ப்பாணம் சித்திரை 6 ஸபர் 22 திங்கட்கிழமை (19-4-71)

கோட்டை, ஞாயிறு பருத்தித்துறைத் தொகுதித் தேர்தல் ஆட்சேப மனு செலவுத் தொகையுடன் இன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

பருத்தித்துறைத் தொகுதியிலிருந்து தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. கே. துரைரத்தினம் ஆட்சி மன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகா



தெனத் தீர்ப்பளிக்குமாறு கோரித்தாக்கல் செய்யப்பட்டமனுவை விசாரணை செய்த தேர்தல் நீதிமன்ற நீதியரசர் திரு எஸ். ஆர். விஜயதிலகா இன்று தமது தீர்ப்பை வழங்கினர்.

மனுதார் சார்பில் திரு. கே. ஸி நடராஜா கியு ஸி. யும், எதிர்மனுதார் சார்பில் திரு. என். சத்தியேந்திராவும் ஆஜராகி வாதாடினர்.

---

கோட்டை, ஞாயிறு சித்திரை மாதம் 18, 19ந் திகதிகளில் கொழும்பு சர்வகலாசாலை வைத்தியத்துறை மாணவர்களுக்கு நடைபெறவிருந்த பரீட்சை பின் போடப்பட்டுள்ளது.

# மண்ணெண்ணை விநியோகத்தில் மோசடியானல் லைசன்ஸ் ரத்து!

## பங்கீட்டு முறையில் வழங்க அரசாங்க அதிபர் ஏற்பாடு

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் சீனி, மண்ணெண்ணை, பெட்ரோல் முதலிய அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தில் பதுக்கல், கொள்ளை லாபம் அடித்தல் போன்ற மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா நேற்று மாலை தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கக்கடைகள் மூலமும், உத்தரவு பெற்ற வியாபாரிகள் மூலமும் பங்கீட்டு முறையில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் மண்ணெண்ணை வழங்குவதற்கு அந்தந்தப் பகுதிக் காரியாதிகாரிகள் வாயிலாக ஏற்பாடு செய்வதற்குத் தாம் ஏற்ற ஒழுங்குகளை மேற்கொண்டிருப்பதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மண்ணெண்ணை, பெட்ரோல், டீசல், சீனி மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் விற்பனை ஆகியவற்றில் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக சில வர்த்தகர்கள் பற்றித் தமக்குப் புகார் கிடைத்திருப்பதாகவும் இது பற்றி விசாரணை செய்வதற்குத் தமது உத்தியோகத்தர் சிலரைத் தாம் பணித்திருப்பதாகவும் திரு. அமரசேகரா கூறினர். இவர்கள்மீது கூறப்பட்ட புகார்கள் நிரூபிக்கப்பட்டால் அவர்களுடைய லைசன்ஸ்கள் ரத்துச்செய்யப்படுமென்றும் அவர் கூறினர்.

## 343-வது சுவீப் ஒத்திவைப்பு

கோட்டை ஞாயறு 343வது தேசிய சுவீப் இழுப்பு பின்போடப்பட்டுள்ளது இச் சுவீப் இழுக்கப்படும் இடம் நேரம் திகதி பின்பு அறிவிக்கப்படும் என

இலங்கை தேசியலொத்தர் சபை அறிவித்துள்ளது இதற்கான மறுதிகதி அறிவிக்கப்படும்வரை இவ்விலக்க தேசிய சுவீப் சீட்டுக்கள் விற்பனைக்குச் செல்லுபடியாகும்.

## நாட்டின் புணரமைப்புக்கு கமிட்டி நியமனம்

கோட்டை, திங்கள் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட இடங்களில் புனர் நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்காகப் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா செயற்குழு ஒன்றை நியமித்துள்ளார்.

நீர்பாசனநெடுஞ்சாலை மின்சக்தி அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா தலைமையில் அமைக்கப்பட்ட இக்குழுவில் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின, கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா, தோட்டத் தொழில் அரசியல் அமைப்பு அமைச்சர் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன், திரு. பேர்னட் சொய்சா எம். பி. ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இக்குழுச் செயலாளராக நீல் குணசேகரா, கடமையாற்றுவார்.

பயங்கரவாதிகளினால் பாதிக்கப்பட்ட இடங்களைச்

(5-ம் பக்கம் பார்க்க)

## சந்தேகம் ஏற்படும் அரசாங்க ஊழியருக்கு 'கல்தா' கிடைக்கும்

கோட்டை, ஞாயிறு அரசாங்க ஊழியர்கள் அரசாங்க நலனுக்கு பாதகமான நிலையில் செயல்படுகிறார்களென சந்தேகம் ஏற்படுமேயானால் அவரை அவ் வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.

இவ்வறிவித்தலை மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் 5வது பிரிவின்கீழ்ப்பிரகடனப் படுத்தியுள்ளார்.

கூட்டுத்தாபனத் தலைவர், சபைத்தலைவர், தமது ஸ்தாபனங்களில் வேலைசெய்யும் ஊழியர்களை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் உரிமை உடையவர்களாவார்கள்.

அரசாங்கத்திற்கு விரோதமாகச் செயல்பட்டார்களெனக்கருதப்பட்டு தடுத்து வைக்கப்பட்டசபைகளுடன் ஏதாவது முறையில் சம்பந்தப்பட்டவராய் இருப்பதாகக் கருதப்படும் அரசாங்க ஊழியரும் தற்காலிகவேலை நீக்கம் செய்யப்படுவர்.

இதுசம்பந்தமாக வேலை நீக்கம் செய்யப்படும் ஒருவர் எந்த நீதிச்சபையிலோ நீதிமன்றங்களிலோ வழக்குத் தொடரமுடியாது.

அரசாங்க ஊழியர்களுக்கு வைத்தியம் மருத்துவம் போன்ற காரணங்களுக்காகமட்டுமே இனிமேல் லீவு கொடுக்கப்படும் இப்படிப்பட்டவர்கள் அரசாங்க வைத்தியரிடம் சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும். வேறு தக்ககாரணங்களுக்காகவும் லீவு அளிக்கப்படும். அவை சம்பந்தப்பட்ட அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியின் ஒப்புதலின் பின்பே கொடுக்கப்படும் என அரசாங்க அறிவித்தல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொண்டர்படை

கோட்டை, ஞாயிறு அரசாங்கம்நாட்டுநலனுக்காகச் செயலாற்றவேண்டிய தொண்டர்படையை ஆரம்பித்துள்ளது. இதில் இ. ஒ. கூ., இ. போ. ச இலங்கை வங்கி மக்கள் வங்கி ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களும் அடங்குவர்.

## மரண அறிவித்தல்

### திருமதி வனிதரத்தினம் சதாசிவம்

காங்கேசன்துறை வழக்கறிஞர் ஆ. வ. சதாசிவம் அவர்களின் மனைவி வனிதரத்தினம் காலமாகிவிட்டார், இவர் திருமகள், கலைமகள், மலைமகள் ஆகியோரின் தாயாரும், மஞ்ஞேன்மணி குமாரசாமி, நவநீதம் சுந்தரலிங்கம், தவமணி கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற அரியரத்தினம் பாலசுந்தரம், அற்புதம் செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும் கனகசுந்தரம் (கணக்காளர் உணவு இலாகா) திருநாவுக்கரசு (யாழ். உலோகக்தொழிற்சாலை உரிமையாளர்) பரம்சோதி (ஆசிரியர் நடேஸ்வரர்க்கல்லூரி) ஆகியோரின் மாமியாருமாவர். அன்னாரின் பூதஉடல் இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் இல்லத்தில் இருந்து காங்கேசன்துறை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் தரு வரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

3245

## ஊரடங்கு நேரம்

இன்று மாலை
6-00
மணி முதல்
நாளை காலை
6-00
மணி வரை

## மரண அறிவித்தல்

கிளிநொச்சி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வி. ஆனந்தசங்கரியின் அன்பு மனைவியும் கைத்தொழில் இலாகா ஓய்வுபெற்ற நிர்வாக உதவியாளர் திரு. க. நாகலிங்கம், திருமதி சு. நாகலிங்கம் ஆகியோரின் அருமைப் புதல்வியும் பலாலி கனிஷ்ட பல்கலைக் கழக விரிவுரையாளர் என். ஞானேந்திரன், அனுராதபுரம் இ. போ. சபை என். சதானந்த ஆகியோரின் சகோதரியும்



கே. எஸ். பொன்னம்பலம், டாக்டர் எஸ். இராஜசூரியர் ஆகியோரின் மருமகளுமான திருமதி கன்மணி ஆனந்தசங்கரி 13-4-71ல் காலமானர். அன்னாரின் ஈமச்சடங்குகள் 15-4-71-ல் நடைபெற்றன.

292/4, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

3244

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்து - சிரியா - லிபியா கூட்டமைப்பு உதயம்!

## இழந்த அரபுப்பகுதிகளை மீட்பதே பிரதான நோக்கமாம்

கெய்ரோ, ஏப்ரல் 18

**மூன்று அரபு நாடுகள் சேர்ந்து ஒரு கூட்டு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. எகிப்து, சிரியா, லிபியா ஆகியவையே இந்த மூன்று அரபு நாடுகள்.**

அரபுக் குடியரசுக் கூட்டமைப்பு என்று அழைக்கப்படவிருக்கும் ஸ்தாபனத்தை உருவாக்குவதற்கான திட்டத்தை மேற்படி நாடுகளின் அதிபர்கள் மூவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக சிரியா, எகிப்து, லிபியா ஆகிய நாடுகளின் அதிபர்கள் பெல்காஸில் நடந்த நான்கு நாட்களாகக் கூடிப்பேசினார்கள். இந்தக் கூட்டு அமைப்பில் இதர அரபுநாடுகளும் விரும்பினால் சேர்ந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சூடான் இதில் விரைவில் சேர்ந்துகொள்ளும் என்று எகிப்திய அதிபர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்

மூன்று நாடுகளிலும் இத்தக்கூட்டமைப்புபற்றிய தகவல்களை அந்நாட்டு அதிபர்கள் ஏககாலத்தில் வானொலிகள் மூலம் வெளியிட்டனர்.

இந்தக்கூட்டு அமைப்புப் பற்றிய மக்கள் கருத்தை அறிவதற்கான வாக்கெடுப்பு மூன்று நாடுகளிலும் அடுத்த செப்டம்பர் மாதம் நடைபெறும்.

இஸ்ரேலியரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரபுப் பகுதிகளை மீட்பதே இந்தக் கூட்டு அமைப்பின் பிரதான லட்சியம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஸ்தாபனத்துக்கென தலைமைப்பீடம் ஒன்று இருக்கும். இதில் மூன்று நாடுகளினதும் அதிபர்கள் அங்கம் வகிப்பார்கள். இவர்கள் தங்களுக்கென ஒரு அக்கிராசனரைத் தெரிவுசெய்து கொள்வார்கள். இந்த நாடுகளின் வெளிநாட்டுக்கொள்கையை இந்தச் சபையே தீர்மானிக்கும் என்று தெரிகின்றது.

எல்லைப்பிரதேசப் விஷயத்தில் இஸ்ரேலியருக்கு விட்டுக் கொடுப்பதில்லையென்றும் அந்த நாட்டுடன் எதுவித பேச்சுவார்த்தையும் வைத்துக் கொள்வதில்லையென்றும் பெங்காஸிமா நாட்டில் மூன்று அதிபர்களும் ஒப்புக் கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### இஸ்ரேல் மந்திரிகள் ஆலோசனை

சூயஸ் கால்வாயைத் திறந்து விடுவது சம்பந்தமாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகள் பற்றி ஆராய இன்று இஸ்ரேலிய மந்திரி சபை கூடுகிறது. புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள மூன்று அரபு நாடுகளின் கூட்டமைப்பின் காரணமாக எழக்கூடிய நிலைமை பற்றி இஸ்ரேலிய மந்திரி சபை ஆராயவிருக்கிறது.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-00 பி.ப. 1-30
சிவாஜி கணேஷன் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர் (யாழ்ப்பாணம் மறு அறிவித்தல் வரை தினசரி காலை 10-00 பி. ப 1. 15
மாஸ்ரர் பிரபாகர் பேபி சுமதி - லெட்சுமி நடித்த
வா ராஜா வா

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
காலை 10-30, பி.ப 2-00
எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி நடித்த
கலங்கரை விளக்கம்

ராஜா (யாழ்ப்பாணம்)
காலை 10 30 பி ப 1-30
எம் ஜி. ஆர் -சரோஜாதேவி நடித்த
மாடப்புறு

வெஸ்லிசினிமா
கரணவாய்
தினசரி 10 00, 1-30 மட்டும்
ஜெய்சங்கர் - விஜயகுமாரி நடித்த
குழந்தையும் தெய்வமும்

2வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 9-30 பி ப, 1-30
எம்.ஜி.ஆர். (இருவேடங்களில்) சரோஜாதேவி ரத்னா நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 9-30, 1-30
சிவாஜி - சரோஜாதேவி நடித்த
அன்பளிப்பு

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30a.m
Spell Binding Suspence Thriller
BANDITS in ROME
தினசரி பி. ப. 1-30
சிவாஜி-சௌகார் ஜானகி நடித்த
லக்ஷ்மி கல்யாணம்

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்
கெப்பிட்டல் - பிளாஸா - மைலன் திரைகளில்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா மனோகர், அசோகன், ஆனந்தன் நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
விநாயகா பிக்சர்ஸ்
மூன்றெழுத்து
(மர்மச்சித்திரம்)


# பாக். ராணுவம் மீண்டும் கைப்பற்றுகிறதாம்

புதுடில்லி, ஏப். 18

கிழக்கு வங்காளத்தில் மேற்குப் பாகிஸ்தான் படைகள் ஷேக் முஜிபுர் ரஹ்மான் ஆதரவாளர்கள் வசமிருந்த பல நகரங்களை மீண்டும் கைப்பற்றிவருவதாக பாகிஸ்தான் வானொலி அறிவித்துள்ளது.

இதேசமயம் ஷேக் முஜிபுர் ரஹ்மான் ஆதரவாளர்கள் புதிய அரசாங்கம் ஒறை சம்பிரதாய பூர்வமாக அமைத்துள்ளதாகவும் அதனை அங்கீகரிக்கும்படி வெளிநாடுகளைக் கேட்டிருப்பதாகவும் செய்திவந்திருக்கின்றது. இந்திய எல்லைக்கு சிலமைல் தொலைவில் மாந்தோப்பொன்றில் இந்த அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றதாகவும்தெரியவருகிறது.

இந்த வைபவத்துக்கு இந்தியாவைச் சேர்ந்தவர்கள் உட்பட பல வெளிநாட்டு நிருபர்களும்அழைத்துச்செல்லப்பட்டிருந்தனராம். வங்காள தேசத்தின் சுதந்திரக்குடியரசு என அவர்கள் பிரகடனம் செய்துள்ளனர்,

இந்தக்குடியரசின் தலைவராக அவாமிலீகின் துணைத்தலைவர் செய்யத் நஸ்ருல் இஸ்லாம் என்பவர் தம்மை அதிபராகப் பிரகடனப் படுத்திக்கொண்டுள்ளார். தமது புதிய குடியரசை அங்கீகரிக்கும்படி திரு. செய்யத் நஸ்ருல் இஸ்லாம் கோரிக்கைவிடுத்திருக்கிறார்.

இந்த வைபவம் நடைபெற்ற இடத்துக்கு வெகு அருகாமையிலேயே பாகிஸ்தான் ராணுவத்தினர் இரண்டுநகரங்களை மீண்டும் கைப்பற்றியிருப்பதாக அறிவித்துள்ளனர்.

இந்திய ஐந்தாம் படை ஒன்றையும் நசுக்கிவிட்டதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

அக்சவ்ரா அரங்கில் தொடர்ந்தும் கடும்சண்டை நடைபெற்றுவருவதாக புதுடில்லிக்கு செய்திகள் கிடைத்துக்கொண்டிருப்பதாக இந்திய வானொலி அறிவித்தது. இப்பகுதியிலுள்ள ரயில் சந்திப்புக்கருகிலுள்ள ஒரு பாலத்தைக் கைப்பற்றுவதற்காக இருதரப்பினரும் கடும் போரில் இறங்கியுள்ளனராம். ராணுவத்தினருக்கு உதவியாக பாரசூட் வீரர்களும் இறக்கப்பட்டுள்ளனராம். விடுதலைப்படையினரின் எதிர்ப்பு வலுவாகியுள்ளதால் பீரங்கிகளும் இப்பகுதிக்குக் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்டது.

பீகார் பகுதியில் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து ஓடிவரும் அகதிகள் அங்கு நடக்கும் கோர நிகழ்ச்சிகள் பற்றி சோகக்கதைகளைக் கூறுகிறார்களாம் மேற்குப் பாகிஸ்தானுக்கு வரும் அகதிகளில் தோட்டாக் காயமுள்ளவர்களும் இருப்பதாக மேற்கு வங்க முதல்வர் திரு. அஜாய் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

## சாஹிரா வீதி திருத்தப்பட்டது

பாண்டிருப்பு, ஞாயிறு

சாய்ந்தமருது சாஹிரா வீதி கல்முனை முற்போக்கு வாலிப இயக்கத்தினரால் சிரமதான அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டது. இச் சிரமதான வேலைகளுக்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு பிரட்மன் வீரக்கோன் தலைமை தாங்கினார்.

கல்முனை ஆட்சிமன்ற உறுப்பினர் ஜனாப எம் ஸி. அமெது உட்படக் கிராம சபைத் தலைவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

மாலையில் சாஹிரா மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற கலைவிழாவில் மருதமுனை கலைக்கூடலின் விடியும்வரை என்னும்நாடகமும் இடம்பெற்றது.

### கிரிக்கட்டெஸ்ட்

# மே. இந். 526 இந்தியா 94-1

போர்ட் ஆப் ஸ்பெயின் ஏப். 18

இந்திய கிரிக்கட்கோஷ்டிக்கும் மேற்கிந்திய கிரிக்கட் கோஷ்டிக்குமிடையில் இங்கு நடைபெறும்கிரிக்கட்டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்று ஆட்ட நேர முடிவில் இந்திய கோஷ்டி தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கட்டை இழந்து 94 ஓட்டங்கள் எடுத்திருந்தது மேற்கிந்திய கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் 526 ஓட்டங்கள் எடுத்தன. இந்தியக் கோஷ்டியின முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 360.


REGAL - Jaffna
Daily 10-15a m. 1-30 p.m.
Fernando Sancho
in
OUR AGENT SLIT


சுன்னாகம் பட்டணசபை

## கேள்வி அறிவித்தல்

1971-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 26-ந் திகதி காலை 10-00 மணி வரை 5-ம் வட்டார வன்னியர் வீதி திருத்த வேலைக்கான சீல் வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களை 23-4-71-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பதாக படிவப்பணமாக ரூபா 10/-ம் பிணைப்பணமாக ரூபா 30/-ம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் பதிவுத்தபால் மூலம் அல்லது சுன்னாகம் பட்டினசபைக் காரியாலயத்திலுள்ள கேள்விப் பெட்டியில் போடல் வேண்டும். மற்றும் விபரங்களை பட்டணசபைக் காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொ. நாகலிங்கம்
தலைவர்,
பட்டினசபை,
சுன்னாகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம்,
16-4-1971. 3243

## வரி விளம்பரம்


விற்பனைக்கு

டேப்றெக்கோடர்

அக்காய் 4 டிராக் (Akai 4 Track) மொடல் இல 1710 W டேப்றெக்கோடர் விற்பனைக்குண்டு புதியது. 286, நாவலர்வீதி, (கைலாசபிள்ளையார் கோவிலடி) யாழ்ப்பாணம். 2762

காணவில்லை

சைக்கிள்!

A. V. 55194 இலக்க றலி சைக்கிள் இராசா படமாளிகை முன் காணாமல் போய்விட்டது. பதிலுக்கு M 15041 இலக்க B S A. சைக்கிள் இருக்கிறது. 16-4-71இல் மாறி எடுத்தவர் நல்லூர் கிராமசேவகரைத் தொடர்பு கொள்ளவும். 2760


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பேச்சாளியல்லாத மனோரமாவை கூட்டத்தில் பேசவைத்த காரணம் என்ன?

## பருத்தித்துறை தேர்தல் வழக்கில் வழக்கறிஞர் நடராஜா வாதம்

பருத்தித்துறை தேர்தல் ஆட்சேப மனு மீதான விசாரணையும் வழக்கறிஞர்களின் தொகுப்புரையும் தொடர்ந்து ஈழநாட்டில் வெளிவந்ததுவாசக நேயர்கள் அறிந்ததே. மனுதாரின் வழக்கறிஞர் நிகழ்த்திய தொகுப்புரையில் ஒருபகுதி தபால் தாமதம் காரணமாக இன்றுதான் பிரசுரிக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளதென்பதை அறியத்தருகிறோம். -ஆ-ர்.

பருத்தித்துறைத் தேர்தல் ஆட்சேப வழக்கு விசாரணை நீதியரசர் திரு. எஸ். ஆர். விஜயதிலகா முன்னிலையில் மீண்டும் ஆரம்பமாகியபோது மனுதாரான ஆசைப்பிள்ளை திருநவுக்கரசுவின் பிரதம வழக்குரைஞர் திரு. கே. சி நடராசா தனது தொகுப்புரையை ஆரம்பித்து நிகழ்த்தினார்

இதற்கு முன் இரண்டாவது எதிர் மனுதாரரான செல்வி மனோரமாவின் வழக்குரைஞரான திரு. செ. சந்திரதாசன் தனது தொகுப்புரையை நிகழ்த்தும்போது கூறியதாவது:

செல்வி மனோரமாவைப் பொறுத்தமட்டில் குற்ற இயல் சட்டத்தின் கீழான ஒரு குற்றச்சாட்டினை எதிர்நோக்கிய நிலையில்தான் இருக்கிறாரே யொழிய தேர்தல் செல்லுபடியாகுமா செல்லுபடியாகாதா என்பதைப் பற்றி அவர் சம்பந்தப்பட்டவரல்ல எனவே எல்லாக் குற்ற இயல் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகளைப் போல செல்வி மனோரமாவுக்கு எதிரான குற்றச்சாட்டினை குற்றம் சுமத்தியவரே நிரூபிக்க வேண்டுமேயன்றி தான் நிரபராதியென்று ருசுப்படுத்த செல்வி மனோரமா சாட்சியமளிக்கவோ, அவர் சார்பில் வேறு சாட்சியங்களை அழைக்கவோ வேண்டிய அவசியமில்லை செல்வி மனோரமா ஏன் சாட்சியமளிக்கவில்லை என்று கூட மனுதார் சார்பில் குறைவாகப் பேச சட்டத்தில் இடமில்லை; ஏனெனில் மனோரமாவுக்கு எதிரான குற்றச்சாட்டினை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு மனுதாருக்கு இருக்கின்ற அதே வேளையில் தான் நிரபராதி என்று நிரூபிக்கவேண்டிய பொறுப்பு சட்டப்படி செல்வி மனோரமாவுக்குக் கிடையாது.

மனுதாரின் வழக்குரைஞரான திரு கே. சி நடராஜா தனது தொகுப்புரையில் கூறியதாவது:-

இந்தத் தேர்தல் ஆட்சேபனை வழக்கு மிக முக்கியமானதொன்றாகும். எதிர் மனுதாரான திரு. கே துரைரத்தினத்திற்கு இந்த ஆட்சேபமனு எப்படி பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துமோ, அதைப் போலவே திரு. நடராஜவைப் பொறுத்தமட்டிலும் மிக முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாக இம்மனு அமைந்துள்ளது. பொதுமக்கள் முன்னிலையில் தனது கௌரவத்தையும், செல்வாக்கையும் நேர்மையையும் திரு. நடராஜா இந்தத் தேர்தல் ஆட்சேப மனுமீதான வழக்கு மூலம் நிலைநிறுத்திக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

மனுதாரான திரு. சூசைப்பிள்ளை திருநாவுக்கரசு 9-ந் திகதி கூட்டத்தில் கண்டது பற்றியும், கேட்டது பற்றியும் சத்தியக்கடதாசியில் கையெழுத்திடாதது பற்றி எதிர்மனுதாரின் வழக்குரைஞர் பெரிதுபடுத்திப் பேசினார். தேர்தல் ஆட்சேபனை மனு சுமத்தப்பட்டுள்ள குற்றங்களைப் பற்றிய விபரங்களைக் கொண்ட சத்தியக் கடுதாசியும், மனுவுடன் இணைக்கப்படல் வேண்டும் என்பது 1970-ம் ஆண்டு இயற்றப்பட்ட திருத்தச் சட்டத்தின் கீழ் தான் கொண்டுவரப்பட்ட விதியாகும். எனவே சத்தியக்கடுதாசியின் தாரதம்மியங்களைப் பற்றியும், அதனை மனுதாரர்தான் கையெழுத்திட வேண்டுமா? அல்லது மனுதார் அல்லது வேறு ஒருவர் கையெழுத்திடவேண்டுமா என்பதிலே மனுதாரான திரு திருநாவுக்கரசுக்கும், இந்த வழக்கைத் தாக்கல் செய்ய அவருக்கு எல்லா வழிகளிலும் உதவி செய்த திரு நடராஜாவுக்கும் நியாயமான ஐயப்பாடுகள் எழக் காரணங்களுண்டு எனவே தான் அவர்கள் துரைசாமியைக்கொண்டு சத்தியக்கடுதாசியில் கையெழுத்திட வைத்தார்களே தவிர வேறு காரணங்களால் அல்ல.

அத்தோடு, தங்களது சார்பில் முக்கிய சாட்சியான துரைசாமி பின்னர் ஒரு சட்டத்தில் மாறிப் பேசாதிருக்க ஒரு முன்னேற்பாடாக அவரைக் கொண்டே சத்தியக்கடுதாசியில் 9ம் திகதி கூட்டத்தில் நடந்தது பற்றி கூறிக் கையெழுத்திட வைத்திட விரும்பியிருந்தாலும் அதில் பிழையொன்றுமிருக்க முடியாது.

தமிழரசுக்கட்சியின் வேட்பாளரான திரு துரைரத்தினம், பருத்தித்துறைத் தொகுதியில் வெற்றிபெற்ற போதிலும், அவருக்குக் கிடைத்த பெரும்பான்மை வாக்குகளின் தொகை தேர்தலுக்குத் தேர்தல் குறைந்துகொண்டே வந்திருக்கிறது என்பது இருசாராரும் ஏற்றுக்கொண்ட விஷயம்.

அதைப்போலவே பருத்தித்துறைத் தொகுதியில் திரு. துரைரத்தினமும், திரு. நடராசாவுமே முக்கிய வேட்பாளர்கள் என்பதும், 1970 தேர்தலில் இவ்விருவருக்கும் இடையில் மிகக் கடுமையான போட்டி நடைபெற்றதென்பதும் இருதரப்பினரும் ஏற்றுக்கொண்ட விஷயமாகும்.

ஆர்ச்சுணராசா என்பவர் கொலைசெய்யப்பட்டார் என்பதையோ, 9-ம் திகதி வல்வெட்டித்துறையில் நடந்தகூட்டத்தில் இரண்டாம் எதிர்மனுதாரான செல்வி மனோரமா தான் கொலைசெய்யப்பட்ட ஆர்ச்சுணராசாவின் மகள் என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு பேசினார் என்பதனையோ எதிர் மனுதார் சார்பில் யாரும் மறுத்தது கிடையாது.

இதைப்போலவே செல்வி மனோரமா பேசியபோது முதலாவது எதிர்மனுதாரான திரு. கே. துரைரத்தினம் கூட்டத்தில் இருந்தார் என்பதும் செல்வி மனோரமா ஒரு கட்டத்தில் கடுதாசித்துண்டு ஒன்றினைப்பார்த்து வாசித்தார் என்பதும் இருசாராரும் ஏற்றுக்கொண்டதாகும்.

இப்படியான விஷயங்களில் இருசாராருக்கும் கருத்துவேறுபாடு இல்லாத போதும், செல்வி மனோரமா அந்தக்கூட்டத்தில் என்ன பேசினார் என்பதில்தான் இருதரப்பு சாட்சியங்களும் முரண்பாடான சாட்சியங்களை அளித்திருக்கின்றன

இருதரப்பிலும் சாட்சியமளித்த சாட்சிகள் அனைவருமே செல்வி மனோரமா 9-ம் திகதி கூட்டத்தில் என்ன பேசினார் என்பதைப்பற்றிய வியக்கத்தக்க வகையில் அவர் பேசிய வார்த்தைகளை ஞாபகப்படுத்திவைத்துக் கூறியுள்ளன.

ஆனால் மனுதாரின் சாட்சிகள் செல்வி மனோரமா பேசிய வார்த்தைகளைக் கவனமாகக்கேட்டு நினைவில் வைத்துக்கொண்டதிலும், எதிரி மனுதாரின் சாட்சிகள் அவ் வார்த்தைகளைக் கேட்டு நினைவில் வைத்துக் கொண்டதற்கும் ஒரு முக்கிய வேறுபாடு உள்ளது என்பதைக் கவனத்திற்கெடுத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது.

மனுதாரரான திரு துரைரத்தினமும், அவரது சாட்சிகளான வேலும்மயிலும், பாசேந்திரம் ஆகியோரும் செல்வி மனோரம்மாவின் பேச்சு முக்கியமான பேச்சு அல்லவென்றும் அவர் அந்தப் பேச்சில் முக்கியமான விஷயங்களைச் கூறவில்லை என்றும், அது ஒரு சர்வ சாதாரணமான பேச்சுதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்கள்

ஆனால் மனுதாரின் சாட்சிகளோ செல்வி மனோரமா தன்னை 'கொலையுண்ட அர்ச்சுணராசாவின் மகள்' என்று அறிமுகப்படுத்திக் கொண்டுபேச ஆரம்பித்ததால் முக்கியமான பேச்சாக, அவரது பேச்சைக் கருதி, கவனத்துடன் கேட்டார்கள்.

எனவே, இந்த இரு வேறுபட்ட பின்னணியில் செல்வி மனோரமாவின் பேச்சினை இருதரப்பாரும் கேட்டிருந்தால், முக்கியமில்லாத சர்வ சாதாரணமான பேச்சு என்று நினைத்துக்கொண்டு பேச்சினைக் கேட்டவர்கள் மனதிலா? முக்கியமான பேச்சு என்று நினைத்துக் கொண்டவர்கள் மனதில் பேச்சில் இடம்பெற்ற வார்த்தைகள் சரியானபடி பதிந்து நிலைத்து நிற்கும் என்பதை நீதியரசரவர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும்

இரண்டாவதாக, எதிர் மனுதாரரின் சாட்சியான பாசேந்திரனை, அவர்களது வழக்குரைஞர் சத்தியேந்திரா மிக நம்பகமான சாட்சி என்று சான்றிதழ் வழங்கினர் அதே சாட்சிதான் செல்வி மனோரமா "ஒரு கட்டத்தில்" கடுதாசித் துண்டொன்றைப் பார்த்து வாசித்தார் என்று சாட்சியமளித்துள்ளார். மனுதாரரான திருநாவுக்கரசும், அவரது சாட்சியான துரைசாமியும், இதையே தான் கூறியுள்ளார்கள் அதாவது முதலில் பேசத் தொடங்கிய மனோரமா ஒரு கட்டத்தில் பேச்சு தடைபட்டு. கடதாசித் துண்டினைப்பார்த்து வாசித்தார் என்றுதான் அவர்களும் சாட்சியமளித்தார்கள். எதிர் மனுதாரான திரு. துரைரத்தினம் பார்த்து வாசிக்கச் சொன்னாரா? இல்லையா என்பதை தற்போதைக்கு ஒரு புறத்தில் வைத்துவிட்டுப் பார்த்தால் எதிர்மனுதாரரின் சாட்சியான பாசேந்திரமும், மனுதாரரின் சாட்சிகளும் மனோரமா ஒரு கட்டத்தில் கடதாசித் துண்டொன்றினைப் பார்த்து வாசித்தார் என்பதில் கருத்து ஒற்றுமைப்பாடுடன் சாட்சியமளித்துள்ளனர் என்பது தெளிவாகிறது,

பாசேந்திரம் சொல்வது- எதிர் மனுதாரரின் வழக்குரைஞர் கூறியபடி, அவர் நம்பகரமான சாட்சியானபடியால் - உண்மையானது என்று ஒப்புக்கொண்டால், மனுதாரரின் சாட்சிகள் கூறியதும் உண்மைதானே- 9ந் திகதி நடந்த கூட்டத்துக்கு அவர்கள் போகாதிருந்தால் ஒரு கட்டத்தில் மனோரமா கடுதாசித் துண்டு ஒன்றினைப் பார்த்து வாசித்தார் என்பதைப் பற்றி எப்படித் திட்டவட்டமாக உறுதியோடு சாட்சியமளித்திருக்கமுடியும்?

செல்வி மனோரமாவை ஏன் 9ந் திகதிக் கூட்டத்தில் பேசவைத்தீர்கள்? அதன் உள்நோக்கம் என்ன? என்பது பற்றி நீதியரசரவர்கள் எதிர்மனுதாரரான துரைரத்தினமிடமும், அவரது சாட்சிகளிடமும் பலமுறை வற்புறுத்தி வற்புறுத்திக் கேட்டும் தக்கபதில்கிடைக்கவில்லை என்றுதான் நான் கருதுகிறேன்-வாலிப முன்னணியினர் கொண்டுவந்தார்கள்; மாமா அழைத்துவந்தார்- என்றபடியான பதில்கள் தான் அளிக்கப்பட்டனவே யொழிய சரியான பதில் கூறப்படவில்லை.

செல்வி மனோரமா பெரிய பேச்சாளியல்ல, பெரும் கூட்டத்தைக் கவரக்கூடிய வகையில் எதுவும் கூறக்கூடியவரல்ல. இப்படி எந்த வகையிலும் முக்கியத்துவம் இல்லாத ஒருவரை 9ந் திகதி வல்வெட்டித்துறைக் கூட்டத்தில் பேசவைத்ததே திரு. நடராசாவின் நற்பெயருக்கும், கௌரவத்துக்கும், மாசுபடுத்தத்தான் என்பது தான் எனது வாதமாகும்.

திரு. நடராஜாவைப் பற்றி தனிப்பட்ட முறையிலோ உத்தியோகபூர்வமான முறையிலோ எதுவுமே பேசப்படவில்லை என்று எல்லா சாட்சிகளுமே முற்றாக மறுத்திருக்கிறார்கள். நடராஜாவைப்பற்றி எதுவுமே பேசவில்லை என்று இவர்கள் மறுத்திருப்பதில் இருந்தே இவர்கள் உண்மையை மறைத்துச் சாட்சியமளித்திருக்கிறார்கள் என்பதை நிலைநிறுத்துகிறது

திரு. துரைசாமி 27 ஆண்டுகாலம் சிறுபிள்ளைகளுக்கு ஆசிரியராக இருந்தவர், அப்படியான மனிதர் இந்தச் சின்னஞ்சிறு சிறுமி மீதான இப்படியான தொடு பழியைச் சுமத்த ஏன் முன்வர வேண்டும் என்பதையும் நாம் ஆராய வேண்டும்.

செல்வி மனோரமா பார்த்து வாசித்து கடதாசித் துண்டைக் கோர்ட்டில் சமர்ப்பிக்க முதலாவது எதிர் மனுதாரரான துரைரத்தினம் இதுவரை எந்த முயற்சியையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. அந்தக் கடதாசித் துண்டுக்கு என்ன கதியாயிற்று? அதனைக் கொடுத்தவர் யார்? அதில் எழுதியிருந்தது என்ன? என்பதைப்பற்றி அருமையான சாட்சியமளிக்கக்கூடிய செல்வி மனோரமாவையோ அவரது பாதுகாவலரான பூபாலசந்தரத்தையோ சாட்சியமளிக்க திரு. துரைரத்தினம் அழைக்கவில்லை.

செல்வி மனோரமா பேசிய பின் கூட்டத்தில் பரபரப்போ கலவரமோ ஏற்பட்டதா என்று கேட்டதற்கு பாசேந்திரம் இல்லையென பதிலளித்துள்ளார். சுமார் 5000 பேர் வந்திருந்த கூட்டத்தில் கைதட்டும் ஆரவாரமும் கலந்து கூட்டத்தில் பலர் பலவிதமாகப் பரபரப்பாகப் பேசியதை கூட்டத்திலிருந்த பொலிஸ்காரர்கள் சரியாக அவதானித்திருக்க முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. தான் அதற்காகக் கூட்டத்தில் பரபரப்பு காணப்பட்டதாக துரைசாமியும் திருநாவுக்கரசுவும் கூறியது பிழையாக இருக்க முடியுமா?

## 'பண்டமாற்று முறையில் வணிகத்தை வளர்க்கலாம்'

### தாய்லாந்து அறிஞர் கருத்து

மானிப்பாய், ஞாயிறு

ஆசியாவிலுள்ள கூட்டுறவு இயக்கங்கள் பண்டமாற்று அடிப்படையிலே தமக்கிடையே வணிகத்தை வளர்க்க வேண்டும். அத்துடன் தமது நாடுகளுக்கிடையே வல்லுநர்களைப் பரிமாறுவதற்கு திட்டமொன்றினை வகுத்தல் வேண்டும் இவ்வாறு தாய்லாந்து கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தின் ஆராய்ச்சி வெளியீட்டுப் பகுதித் தலைவர் திரு பிரதிப் மச்சிமா வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை உறுப்பினருடன் கலந்துரையாடுகையில் கூறினார்.

அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தினால் வகுக்கப்பட்ட ஆசிரியர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் இங்கு வந்த திரு மச்சிமா இலங்கையில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் மிகச் சிறப்பாக இயங்குகின்றது என்ற கருத்தை வெளியிட்டார்.

தாய்லாந்தின் பொருளாதார உற்பத்தியில் விவசாயத்துறை 29 வீதத்தையும் கைத்தொழில் 19 வீதத்தையும் பெற்றுள்ளதென்றும் உணவைப் பொறுத்தவரை தாய்லாந்து தன்னிறைவு பெற்றிருக்கிறதென்றும்

(4-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

உங்களுக்கு உதவி நீங்களே. முட்டாளின்துணை உதவியாகாது. நல்ல வழியில் நன்றாய் நிர்வகிக்கப்பெற்ற நம்மனந்தான் நமக்குமாபெரும்உதவி செய்யும் தாயோ தந்தையோ எந்த உறவினருமோ அவ்வளவு தூரம் உதவி செய்ய முடியாது.

— புத்தர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் விரோதிகிருது வருஷம் சித்திரை மாதம் 6-ந் திகதி ( 19 - 4 - 71)

# பொதுஜனத் தொடர்பு

இலங்கையிலுள்ள வடகொரியாத் தூதரகத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் நாட்டை விட்டு வெளியேறவேண்டுமென அரசாங்கம் உத்தரவிட்டதைத்தொடர்ந்து அவர்கள் அனைவரும் [வடகொரிய நாட்டுடன் இலங்கைக்குள்ள நட்புறவும் நல்லெண்ணமும் சிறிதும் கெடாத வகையில்] வெளியேறிவிட்டதாகக் கூறும் செய்தி பல விஷயங்களிலும் சிந்தனையைத் தூண்ட உதவுவதாக இருக்கவேண்டும்.

ஒரு நாட்டின் தூதுவர் மற்றொரு நாட்டில் இருக்கும்போது அவர் அங்கே நித்திரைசெய்தாலும் சரி [அவர் வேறு நாட்டில் இருக்கும்போது தமது சொந்த நாட்டிலுள்ள வீட்டிலா நித்திரை செய்வார்கள்!] பொய் சொன்னாலும் சரி தமது நாட்டின் நலனுக்காக செய்யவேண்டுமென்பது ஆங்கிலத்திலுள்ள வேடிக்கைப் பழமொழியொன்று கூறும் விளக்கம். ஆனாலும் எந்தத் தூதுவரும் வெளிநாடு ஒன்றில் நித்திரைசெய்தாலும் பொய் சொன்னாலும் அந்த நாட்டின் நலனுக்கு ஆபத்து ஏற்படுத்துவதானால் அந்த நாட்டில் அவர் நித்திரையும்செய்ய முடியாது தொடர்ந்து பொய் சொல்லவும் முடியாது. வெளியேறித்தானாக வேண்டும்!

வெளிநாட்டுத் தூதுவர்கள் போன்று பணியாற்ற வேண்டிய பல உயர்பதவிகள் நமது நாட்டிலும் இருக்கின்றன. வெளிநாட்டுத்தூதுவர் (ராஜதந்தரி) ஒருவர் எவ்வாறு தமது நாட்டுப்பெரும் சொத்தாகவிளங்குகிறாரோ அதேபோன்று "பப்ளிக் றிலேஷன் ஒபீஸர்" என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பொதுஜனத் தொடர்பு அதிகாரி அல்லது மக்கள் உறவு அதிகாரியும் தாம் பணியாற்றும் இலாகாவுக்கு அல்லது நிறுவனத்துக்காக பொய்சொல்லவும் வேண்டும். "பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மைபயக்கும் எனின்" என்பது வள்ளுவர்வாக்கு பிறருக்குக்கெடுதிசெய்யாமல் நன்மையே செய்யுமானால் பொய்யும் சொல்லலாம் என்பது இதன் பொருள். இந்தவகையில் பொய் சொல்லியும் நாட்டின் நலனையும் அரசின் நலனையும் மக்களின் நலனையும் பாதுகாக்கின்ற பொதுஜனத்தொடர்பு அதிகாரி நாட்டுக்குக் கிடைத்திடும் மூலதனமென்றே சொல்லவேண்டும்.

பொதுஜனத் தொடர்பு அதிகாரியென்ற ஓர்பதவியை உருவாக்கிய பெருமை அமெரிக்கர்களையே சாரும். அவர்கள் உலகில் பலநாடுகளிலும் தமது செல்வாக்கை வளர்த்துக்கொண்டதற்கும் குபேரநாடு என்று பெயர் பெற்றதற்கும் இந்தப் பதவிகளுக்குத் தகுதிவாய்ந்தவர்களைத் தெரிவு செய்து நியமித்ததும் காரணமாக இருக்கலாம்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பொது ஜனத்தொடர்பு அதிகாரிகளின் பொறுப்பும் கடமையும் நிறைய உண்டு. மக்களுக்கு அரசாங்கத்தின் நிலைமையையும் நாட்டின் நிலைமையையும் விளங்கப் படுத்துவதுடன் மக்களின் நிலைமையும் அரசாங்கத்துக்குத் தெளிவு படுத்தி நாட்டின் அமைதியைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பும் இவர்களுக்கு இருக்கிறது. சரியாகச் சொல்லப்போனால் இந்தப் பொதுஜனத்தொடர்பு அதிகாரிகளின் கைகளில்தான் மாவட்டங்களின் அபிவிருத்தியும் அதன் மூலம் நாட்டின் முன்னேற்றமும் அமைதியும் பெரிதும்தங்கியிருக்கிறது. நாட்டின் புனர்நிர்மாணமும் முன்னேற்றமும், அமைதியும்கூட இந்தப் பொதுஜனத் தொடர்பு அதிகாரிகளின் பிரசாரப்பணியில் தான் பெரிதும் தங்கியுள்ளது.

இது போன்ற மிகப் பொறுப்பும் கடமையும் பொறுப்பையும் நிறைந்த அதிகாரிகள் தமது கடமையையும் பொறுப்பையும் தனிப்பட்ட ஆசாபாசங்களுக்கு இடமளிக்காமல் நிறைவேற்றவேண்டும். தனிப்பட்ட குரோதங்களுக்கும், விருப்புகளுக்கும் இடம் கொடுத்தால் தனது சொந்தச் செல்வாக்கை ஓரளவுதான் நிலைநாட்ட முடியுமேதவிர நாட்டின் செல்வாக்கையும் முன்னேற்றத்தையும் கப்பலேற்றுவதற்குத்தான் உதவமுடியும் என்பதை உணரவேண்டும்.

இதுபோன்ற பெரும் பொறுப்பும் கடமையும் உள்ளவர்கள் தமது பழைய கோபதாபங்களை வைத்து வஞ்சம் தீர்ப்பதற்கோ சொந்த நன்மை கருதியோ காரியம் சாதிக்க முனைபவர்கள் தமக்கு மட்டுமல்ல தமது உயர் பதவிக்கும் நாட்டுக்குமே பெருந்தீங்கு செய்பவர்களாகிறார்கள். இதன் மூலம் மக்கள் உறவு அதிகாரிகள் என்ற பதவியின் பெயர் முதல் நம்பர் மக்கள் பகைவர்கள் என்றாகிவிடுகிறது. அந்தப் பெயரை எடுப்பதில் அவர்களுக்கோ பிறருக்கோ விருப்பமில்லாவிடினும், அதுகிடைக்க வழிசெய்து விட்டால் யார்மீது பழிசொல்லித்தான் என்னபயன்?

பொதுஜனத் தொடர்பு அதிகாரிகள் பலர் தமது கடமையையும் பொறுப்பையும் சரியாகச் செய்யவில்லையென்று கூறமுடியாது. ஒரு சிலர் தெரிந்தோ தெரியாமலோ தவறாக நடந்து கொள்ளக் கூடும்; ஆனாலும் இன்றைய நெருக்கடியான நிலையை அவர்கள் சரியாக உணர்ந்து கொண்டு சீனி, மண்ணெண்ணைமுதலிய அத்தியாவசியப் பொருள்கள் மக்களுக்கு எப்படி எப்படி வழங்கவேண்டும், தெரிந்தவர் தெரியாதவர் என்ற பாகுபாட்டுக்கு இடம் வைக்கக்கூடாது, பழைய கோபங்களுக்கு இடம் வைக்கலாகாது என்ற நேர்மை உள்ளத்துடன் பணிபுரிந்தால் இன்று வீண் வதந்திகளுக்கு இடமே இருக்காது.

இதேசமயம் நமதுநாட்டில் வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் எப்படியிருக்கவேண்டுமென அரசாங்கம் கருதுகிறதோ அதேபோல் பொதுஜனத் தொடர்பு அதிகாரிகள் இணைப்பு அதிகாரிகள் இருக்கவேண்டுமென்பதிலும் அக்கறை செலுத்தவேண்டியது அவசியம். வெளிநாட்டவர்கள் தீங்கு செய்தால் அனுப்பலாம். உள்நாட்டவரை என்ன செய்வது?

# பல்வேறு இடங்களிலும் நிலைமை சீரடைகிறது

கோட்டை, ஞாயிறு

நாட்டின் பல பகுதிகளிலும் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் தற்போது தளர்ந்துவருவதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பயங்கரவாத புரட்சியியக்கத்தின் தலைவர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு இவ்வியக்கத்தினரின் வதியிடங்கள் பலவும் ஆயுதப்படையினரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவ்வியக்கத்தினர் நாட்டின் பல பகுதிகளில் மேற்கொண்ட தாக்குதல்களால் நாட்டிற்குப் பெரும் சேதமேற்பட்டுள்ளது.

பயங்கரவாதிகளின் இயக்கத்தினரின் தாக்குதல் இம்மாதம் 5-ம் திகதி ஆரம்பமானதெனினும் 8-ம் திகதியே அத்தாக்குதலின் உச்சக்கட்டமென அன்று அத்தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்,

## எம். பி, தாக்கப்பட்டார்

இப்பயங்கரவாத இயக்கத்தினரால் தெனியாய எம். பி. திரு. சுமணபாலதகநாயகா கடுமையாகத் தாக்கப்பட்டார். பயங்கரவாதிகள் அக்குறஸ்ஸ பொலிஸ் நிலையத்தைத் தாக்குகின்றனர் என்ற செய்தி கேட்டு திரு. சுமணபாலதகநாயகா பொலிஸ் அதிகாரி ஒருவருடன் ஜீப்பில் சென்றுகொண்டிருந்தபோதுவழியில் சுமார் 150 பயங்கரவாதிகள் அவர்களை மறித்து தாக்கியதோடு அவர்கள் சென்ற வாகனத்தையும் தாக்கி தீவைத்துக் கொளுத்தினர். அக்குறஸ்ஸ பொலிஸ்நிலையத்தையும் தீவைத்து சாம்பராக்கினர். இத்தகவல்களை எம்.பி.யே வெளியிட்டிருக்கிறார்.

## மகோவில்..

மகோ பொலிஸ்நிலையத்தையும் பயங்கரவாதிகள் பெரும் சேதத்துக்குள்ளாக்கியுள்ளனர். இப்பொலிஸ்நிலையத்தை தாக்கிய பயங்கரவாதக் கோஷ்டியின் தலைவரை ஆயுதப்படையினர் சில தினங்களுக்கு முன்னர் கைதுசெய்துள்ளனர். விசாரணையின்போது இவர் நாட்டின் பிரபல கிரிமினல் குற்றவாளி என்பது தெரியவந்தது.

## ஜவுளி ஆலை

துல்கிரிய ஜவுளி ஆலையும் இம்மாதம் 5ந் திகதி இரவு பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டு பெரும் சேதம் விளைவிக்கப்பட்டது. இவ்வாலையைத் தாக்கிய கோஷ்டியின் தலைவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்

## ராஜங்கனையில்

ராஜங்கனைப் பொலிஸ்நிலையத்தை பயங்கரவாதிகள் தாக்கிய பொழுது இரு பொலிசார் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகினர். சிலர் காயமடைந்தனர். பொலிஸ்நிலையமும் கடுமையாகத் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது! இங்கு நடைபெற்ற கலவரத்தில் பயங்கரவாதிகள் சிலரும் கொல்லப்பட்டனர்.

## மதவாச்சியில் கப்டன் கொலை

பயங்கரவாதிகளால் மதவாச்சியில் ராணுவத்தினர் எதிர்பாராதவிதமாக தாக்கப்பட்டனர். சுமார் 20 பேர் கொண்ட இராணுவ கோஷ்டியொன்று இரவு 10 மணியளவில் சென்றுகொண்டிருக்கும் பொழுது எதிர்ப்பட்டபாலமொன்றில் பிரயாணம் செய்யமுடியாத வகையில் தடைபோடப்பட்டிருந்தது. இதைக்கவனிக்க அவர்களிற் சிலர் இறங்கிச் சென்றபோது அவர்களை நோக்கிப் பயங்கரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஜீப்புக்குள் இருந்த காப்டன் வீரக்கோன் சூடுபட்டு ஸ்தலத்திலேயே மரணமானார், பயங்கரவாதிகள் நீரில் இறங்கி நீந்திச்சென்றுகொண்டிருக்கையில் அவர்களை இராணுவத்தினர் தாக்கினர் இதனால் 14 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்,

பயங்கரவாதிகள் வசம் சிக்கிய பல பகுதிகளை அரசாங்கம் மீட்டுத் தனது அதிகாரத்தை நிலைநாட்டியுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது பயங்கரவாதிகள் வசம் சிக்கியிருந்த ராஜங்கனைப் பகுதியைத் தற்போது அரசாங்கம் மீட்டுள்ளது எனவும் அங்கு பயங்கரவாதிகளின் இருப்பிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது,

முற்றாக சேதப்படுத்தப்பட்ட வறக்காபொல பொலிஸ்நிலையமும் மீண்டும் நிறுவப்பட்டு செயல்படுவதாகவும் கூறப்படுகிறது.

## விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

தச்சன்தோப்பு கொலை முயற்சி வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நீதியரசர் விசாரணையை இம்மாதம் 27ம் தேதிக்கு ஒத்திவைத்தார். அசைஸ் விசாரணை நாளைக் காலை நடைபெறும்.

— —

## பண்டமாற்று..!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தொடர்ந்து பேசுகையில் திரு மச்சிமா தெரிவித்தார்,

ஐ. ஐ. மே. சபை உபதலைவர் திரு ஆர். சி எஸ். குக் நன்றியுரையின்போது கூட்டுறவுத் துறையில் நாம் ஓர் ஆராய்ச்சிப் பிரிவினைத் தொடங்குவதற்கான நடவடிக்கையினை எடுக்கவேண்டுமென்று தெரிவித்தார்.


## நாட்டின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த பொதுமக்களின் உடனடிப் பிரச்னைகளையும் அங்கு சிவில் நிர்வாகத்தை மீண்டு அமைப்பதுபற்றியும் கைதுசெய்யப்பட்ட தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட அல்லது சரணடைந்தவர்களின் புனர்வாழ்வு பற்றியும் சமூக பொருளாதார சீரமைப்புப் பற்றியும் இக்குழுவினர் ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள்.

## சிரமதான மூலம் பொலிஸ்நிலையங்கள் புனரமைப்பு

தாக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களை அவ்வப்பகுதிப் பொதுமக்கள் சிரமதானப் பணி மூலம் புனரமைத்து வருவதாக அறிவிக்கப்பட்டது மாகோப் பகுதியிலும் மத்திய பகுதியிலும் சிரமதானப் பணியில் பொலிஸ் நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.



மிக்க்வைற் ஸ்தாபனத்தாரின் 18-வது வெளியீட்டின் 3-வது பதிப்பான 'யோகக்கலை' என்னும் அரிய நூலின் முதற் பிரதியை கவியோகி சுத்தானந்த பாரதியார் வாங்கும்போது எடுத்த படம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org